## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.60/2021 C/W OS.6/2022

DW1 கீதா நாள் 27.08.2024

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். சொத்து வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அவர்களுடைய சொத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.மைனர் அபிமன்யூ, மைனர் தமிழ்வாணன் என் மகன்கள் என்றால் சரிதான். அவர்களுடைய பாட்டி தான் கார்டியனாக இருந்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து பூர்வீக சொத்து தான். பூர்வீக சொத்தில் என் கணவருக்கு அவருடைய சகோதர்களுக்கும் இடையே பாகப்பிரிவினை ஆகிவிட்டது. எண் கணவர் 05.08.2019 இறந்தார். தாவா சொத்தை 3, 4 பிரதிவாதிகளுக்கு கடனுக்காக தான் எழுதி கொடுக்கப்பட்டது. வழக்கின் 3–ம் பிரதிவாதி சிங்காரவேலுக்கு எவ்வளவு நிலம் கொடுக்கப்பட்டது என்ற விவரம் தெரியாது. வடிவேல் என்பவர் தான் என்னிடம் நிலம் கிரையம் கேட்க வந்தார். 3, 4 பிரதிவாதிகளுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஒப்பந்தம் செய்த போதும், கிரையம் செய்த போதும் 3, 4 பிரதிவாதிகளை நான் பத்திர அலுவலகத்தில் வைத்து எதுவும் விசாரிக்கவில்லை. நான் பத்திர அலுவலகத்திற்கு என்று போக வில்லை. பணம் கேட்டேன், என்னை பத்திர அலுவலகத்திற்கு அழைத்து போய் வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கினார்கள். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 24 ஏக்கர். தாவா சொத்தை நாங்கள் தான் அனுபவம் செய்கிறோம். தாவா சொத்தை அடமானம் வைத்ததோ, விற்றதோ, வாங்கியதோ வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

**3, 4 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு என் அம்மாவை கார்டியனாக வைத்து என் பிள்ளைகள் என் மீது தாக்கல் செய்துள்ளார்கள். என்னிடம் காட்டப்படும் எதிர்வழக்குரையில் நான் தான் கையெழுத்து போட்டுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 5வது பத்தியில் நான் என் பிள்ளைகளுக்கு கார்டியனாக இருந்து பராமரித்து வருகிறேன் என்று சொல்லியிருந்தால் அது தவறு. என் கணவர் பெயர் சரவணக்குமார். அவர் விவசாயம் தான் செய்து வந்தார். அவர் மீன் பண்ணை வைக்கவில்லை. மீன் பண்ணைக்காக ரூ.7,50,000/– பாரத ஸ்டேட் வங்கியில் கடன் வாங்கியிருந்தார் என்றால் அவர் கடன் வாங்கியிருந்தது எனக்கு தெரியும். எதற்காக என்று தெரியாது. என் கணவர் மீன் பண்ணை வைத்திருந்து அது நஷ்டமாகிவிட்டது என்று பிராதில் சொல்லியிருப்பது எனக்கு

தெரியாது. பெரம்பலூர் பாரத ஸ்டேட் வங்கியிலிருந்து என் கணவர் இறந்தபிறகு ரூ.41,00,000/- செலுத்த வேண்டும் என்று எனக்கு நோட்டீஸ் வந்ததா என்றால் ரூ.17,00,000/- கேட்டு தான் நோட்டீஸ் வந்தது. அந்த கடனை கட்டுவதற்காக நான் பலபேரிடம் கடன் கேட்டது கூறியிருப்பது சரிதான். 3,4 பிரதிவாதியிடமும் நான் கடன் கேட்டேன். என்னுடைய நிலம் மேட்டுநிலம் என்றால் சரிதான். தாவா சொத்தின் ஒரு புறம் அரசு வனம் உள்ளது என்றால் சரிதான். ரூ.41,00,000/- கேட்டு தான் நோட்டீஸ் வந்தது என்றும், 3, 4 பிரதிவாதிகள் போய் பேசி தொகையை குறைத்தார்கள் என்றால் சரியல்ல. பாரத ஸ்டேட் வங்கியில் நான் பிள்ளைகளை அழைத்து போய் அவர்கள் கேட்ட தொகையை கட்ட முடியாது என்று சொன்னேன். அவர் ரூ.8,00,000/- ஆக கட்ட வேண்டும் என்று சொன்னார். நான் ரூ.7,50,000/- கட்டினேன். வடிவேல் என்பவர் தான் கடன் கட்ட பணம் கொடுத்தார். எல்லா நில பத்திரங்களும் வங்கியில் அடமானத்தில் இருந்தது என்றால் சரிதான். சிங்காரவேலர் என்பவரிடம் ஒரு பகுதி நிலத்தை ரூ.6,50,000/- க்கு விற்றேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கடனுக்காக தான் கையெழுத்து போட்டேன். வெள்ளை தாளில் தான் கையெழுத்து போட்டேன். என்னிடம் ஆதார் கார்டை ஒரு மாதம் முன்பாகவே வாங்கி கொண்டார்கள். நான் இந்த விவரத்தை என்னுடைய எதிர்வழக்குரையில் கூறியுள்ளேனா என்று தெரியவில்லை. கடனுக்காக தான் 3, 4 பிரதிவாதிகளுக்கு எழுதி கொடுத்தேன். 2, 3 ஆண்டுகளில் திருப்பி தருவதாக சொல்லி தான் கடன் வாங்கினேன். 27.07.2021 ல் தான் பத்திரம் அலுவலகத்திற்கு சென்றேன் என்றால் தேதி ஞாபகமில்லை. அங்கிருந்த பத்திர அலுவலர் என்னிடம் கிரைய பத்திரம் எழுதி கொடுக்கிறீர்களா என்று கேட்கவில்லை.இது பற்றி நான் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை. எனக்கு கிருஷ்ணாபுரம் பாரத ஸ்டேட் வங்கியில் கணக்கு உள்ளது. எனக்கு ரூ.6,00,000/- வங்கி வரைவோலை கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என் மகள் சினேகா பெயரில் தான் வரைவோலை கொடுக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் 27.07.2021 ல் என் மகள் சினேகாவிற்கு ரூ.6,00,000/- த்திற்கான வரைவோலை கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.4 ஆகும். மேற்படி 6 இலட்சத்தை தவிர வேறு தொகை எதுவும் வங்கி மூலமாக பெறவில்லை. 04.03.2021 ல் ரூ.7,50,000/- பெரம்பலூர் பாரத ஸ்டேட் வங்கிக்கு என் பெயரில் உள்ள கணக்கிற்கு பணம் செலுத்தப்பட்டது என்றால் என் கணவர் பெயரில் உள்ள கடன் கணக்கில் செலுத்தப்பட்டது.அத்துடன் அந்த கடன் முடிக்கப்பட்டது என்றால் சரிதான். நான்

கருமந்துறையில் 5 ஆண்டுகள் குடியிருந்தேன். என் மகளுக்கு கருமந்துறை இந்தியன் வங்கியில் கணக்கு உள்ளது. அந்த கணக்கில் ரூ.5,00,000/- 3, 4 பிரதிவாதிகள் அனுப்பி வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தொகைகளை பெற்றுக்கொண்டபிறகு அவர்களுக்கு நிலங்களை சுவாதீனம் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி ரூ.15,00,000/- செலவு செய்து நிலங்களை சீர்திருத்தம் செய்தார் என்றால் சரியல்ல. ரூ.6,00,000/- கொடுத்ததற்கு 3ம் பிரதிவாதியிடம் இருந்து ஒரு கிரையம் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. ரூ.13,00,000/- த்திற்கு நிலங்களை கிரையம் பேசி ரூர.12,50,000/- பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் எந்த பத்திரமும் கடனுக்காக எழுதி கொடுக்கவில்லை. என்னுடைய எல்லா பத்திரங்களையும் வாங்கி கொண்டார்கள். ரூ.13,50,000/- த்திற்கு கிரையம் செய்வதாக ஒப்புக்கொண்டு கிரையம் ஒப்பந்தம் செய்துகொண்டேன் என்று சொல்வது சரியல்ல. ரூ.10,00,000/- ம் தான் கொடுத்தார். ரூ.3,50,000/- கொடுக்கவில்லை. ரூ.3,50,000/- த்திற்கு பிரதிவாதி என் பெயருக்கு வரைவோலை பெற்று வைத்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. அந்த சமயத்தில் என்னிடம் வேறு எந்த பணமும் இல்லை. பாப்பாத்தி என்பவரிடம் நான் கடன் வாங்கியிருந்தேன். அவரிடம் என் கணவர் குடும்ப சொத்தை விற்றிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாப்பாத்தி என்பவரிடம் இருந்து நான் சொத்து எதுவும் கிரையம் வாங்கவில்லை. பாப்பாத்தியிடம் ரூ.3,97,000/- க்கு 11.08.2021 தேதியில் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் 11.08.2021 தேதியிட்ட கிரைய பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என் கணவர் அந்த சொத்தை ஏற்கெனவே விற்றிருந்தார் என்றும், அதை நான் பிரதிவாதியிடம் பெற்றுக்கொண்ட பணத்தை வைத்து கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக கிரையம் பெறவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**